திரு. ரா. ராமச்சந்திரதுரை : பொதுக் கேள்வி, சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக்கேள்விக்கு இடம் இல்லை என்று சொல்கிறேன். இதையொட்டித்தான் (துணை வினா) இருக்க வேண்டும்.

திரு. ரா. ராமச்சந்திரதுரை : தலைவரவர்களே, முன்பிருந்த அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள ஒதுக்கிக் கொடுத்து வந்த பொருள் உதவி நிறுத்தப்பட்டிருப்பதை மீண்டும் இந்த அரசாங்கம் கொடுத்து உதவ முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் விதி 38-ஐ எடுத்துப் பாருங்கள். நீங்கள் இடுவாய் கிராமத்தை ஒட்டிய வினாவாகக் கேட்டிருக்க வேண்டும். இப்பொழுது தாங்கள் கேட்டிருப்பது மூல வினாவை ஒட்டியதாக இல்லை.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மூல வினாவிற்கு முற்றிலும் தவறானதாக துணை வினா இருந்தாலும், கடந்த முறையிருந்த சர்க்கார் கொடுத்ததை ஏன் நிறுத்திவிட்டது என்பதைப்பற்றி கடந்த முறையிருந்த சர்க்காரிடத்தில் கேட்டிருக்கலாம். முன்பு 1,000 ரூபாய், அதாவது மானியமாக ரூ. 750-ம் கடனாக 250 ரூபாயும் கொடுக்கப்பட்டது. அந்தத் திட்டம் கடந்த முறை நிறுத்தப்பட்டது. புதிய திட்டம் மத்திய சர்க்கார் துணை மூலம் உருவாகிக் கொண்டு வருகிறது.

Wage earning scheme for prisoners

*** 198 *Q*.—Thiru T. MARTIN :** Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government to introduce a wage earning scheme for prisoners undergoing imprisonment in different central jails in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சிறைச்சாலையில் கைதிகள் ஊதியம் ஈட்டிடும் திட்டம் கொண்டு வருவது அரசினர் பரிசீலனையிலிருக்கிறது.

(இ) இத்திட்டத்தின் விவரங்கள் பற்றி ஒரு இறுதியான முடிவெடுக்க மேலும் சிறிது காலம் பிடிக்கும்.

Thiru T. MARTIN : Speaker Sir, I remember that in Kerala the Government has sponsored a similar scheme. May I request the Hon. Minister to send a group of officials to Kerala to find out the feasibility of the scheme which has been worked out by that Government before this Government finalises the scheme ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேரளாவில் இருக்கிறதா என்பதைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை. பஞ்சாப், டெல்லி சிறைச்சாலைகள் இந்தத் திட்டத்தை அமல் நடத்தி நல்ல முறையில் நடைபெற்று வருவதாகப் புள்ளி விவரங்களை இந்த அரசாங்கம் பெற்றிருக்கிறது. அதை நாங்கள் பரிசீலனை செய்கிறோம்.